# வைகறை ரவி

## அஞ்சாமை | அறிவு | ஈகை | ஊக்கம்



கனடாவில் தமிழ் ஊடகத்துறையில் அழுத்தமாகத் தடம்பதித்த வைகறை பத்திரிகை ஆசிரியரான ரவி, தனது மேற்படிப்பு தொடர்பான ஆய்வொன்றிற்காக ஈழத்துக்குச் சென்றிருந்தபோது ஜனவரி 25 அன்று மாரடைப்பால் மரணமடைந்திருந்தார். சிறுவயதிலேயே அரசியலில் ஈடுபாட்டுடன் இருந்த ரவி, GUES ரவி, தோழர் ரவி, வைகறை ரவி என்கிற வெவ்வேறு அடைமொழிகளுடன் அழைக்கப்பட்டிருக்கின்றார். இந்த அனைத்து அடைமொழிகளும் அவரது அர்ப்பணிப்பான, அயராத செயல்வாதத்தின் விளைவாக அவரது அடையாளமாக மாறியவை. கருத்துச் சுதந்திரம், அரசியல் ஜனநாயகம், ஊடகச் சுதந்திரம், விடுதலை வேட்கை ஆகியன குறித்து அவர் எப்போதும் அக்கறைப்பட்டவராகவும் அதற்காக இயங்கியவராகவுமே இருந்தார். எத்தனையோ தடைகள், மிரட்டல்களைத் தாண்டியும் அரசியலில் தொடர்ந்து இயங்கிய வேகம், புலம்பெயர் நாடுகளில் ஊடகங்கள் மீது கடுமையான அச்சுறுத்தல் நிலவிய காலத்தில் அவ்வச்சுறுத்தல்களையும் தாண்டி, வைகறை பத்திரிகையை நடத்திய ஓர்மை, சூழலியல், பத்திரிகைத் துறை, அரசியல் என்று, தான் இயங்கிய அனைத்துத் தளங்களிலும் ரவியிடம் இருந்த தீவிரமும் அர்ப்பணிப்பும் இக்காலத்தில் மற்றவர்களிடம் மிக அரிதாகவே காணக்கிடைப்பது. தாய்வீடு இதழ், ‘வைகறை’ ரவியின் நினைவுகளைப் பகிர்வதன்மூலம் அவருக்குத் தோழமை அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

*அருண்மொழிவர்மன்*

# மறுபடியும் இழப்பின் கவிதை

– சேரன்

எல்லாப் பாடல்களும் அடங்கி விடுகிற
ஒரு பெரு மூச்சு.
என்ன கவி பாடினாலும்
கேளாத காதுகள்.
ஈரமற்ற கண்ணீர்.
நெடுந்தோள்.
உருகி எழுதும் விரல்கள்.
மாலையில்,
பெயர் சூடியும் பெயரற்றதுமான
பறவைகள் வருகின்றன.
உங்கள் உடலைக் கொண்டு செல்கின்றன.
நெருப்ப.
காற்று.
மண்.






# பிரிவுத்துயரின் நிழலில்

*- கமலாகரன் நடராஜா*

எங்கள் இனியதோழன் ரவி பொன்னுத்துரை (GUES Ravi) நடுநிசியில் மாரடைப்பால் காலமாகிய துயரச்செய்தி இன்னும் நெஞ்சைவிட்டகலவில்லை.

இரவு 1 மணியளவில் அதிகாலையின் அமைதியில் உறங்கிக் கொண்டிருந்த என்னை எழுப்பிய தொலைபேசி அழைப்பு தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களுடையது. பதட்டத்தோடு 'என்ன தோழர்'? என்றேன். 'ரவிக்கு சிவியர் ஹார்ட் அட்டாக். இறந்துட்டான்டா' என்றார் தழுதழுத்த குரலால். ஒருகணம் என் இதயமே நின்றது போல உணர்வு. சமாளிச்சுக் கொண்டு பேசி முடித்தேன்.

இந்தப்பதிவை அன்று முகநூலில் எழுதும் வரை எனக்கு உறக்கமில்லை. எனக்கு இரத்த அழுத்தம் அதிகமாக இருந்தது. அவர் இறந்த அன்றைய நாள் பிற்பகல் மூன்று மணியில் இருந்து இரவு எட்டுமணிவரை என்னோடும் தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரனோடும் எனது மனைவி வாணியோடும் யாழ்நகர் கண்காட்சி, புகைப்படப்பிடிப்பு, ராஜா கிரீம் ஹவுஸ் ரோல், அரசியல் பேச்சென மகிழ்ந்திருந்தோம். அதற்கும் அப்பால் அடுத்த நாள் காலை மூவரும் முல்லைத்தீவு செல்லத் திட்டமிட்டிருந்தோம்.

ஆனால், இரவு பத்துமணிக்கு மேல் இணையவழி கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபடி சாய்ந்தார் என்ற செய்தியை அறிந்த போது, மரணத்தின் மீதும் வாழ்க்கை மீதும் காலத்தின்மீதும் கொலைவெறிக் கோபம் அன்று வந்ததைத் தவிர்க்க முடிந்திருக்கவில்லை.

மாணவப்பருவத்தில் விடுதலைக் கனவுகளோடு புறப்பட்டவன் என் தோழன். மரணத்தைத் தழுவும் வரை தடம்மாறா விடுதலை உணர்வோடு EPRLF உடன் பயணிக்கும் அறிவார்ந்த தோழன் அவன். கனடாவில் வாழ்ந்தாலும் வருடா வருடம் தாயகம் வந்து மாணவர்கள் முன்னேற்றம் மரம் நடுகை போன்ற சுற்றுச்சூழல் பணிகள் என ஓடித்திரிந்த 58 வயதுக்காரன்.

இம்முறையும் அவ்வாறே பல கனவுகளோடு வந்த இடத்தில் காலம் இந்தக் கயமையை செய்துவிட்டது.

இயற்கை நேசனான எம் தோழன் ஓர் புகைப்படப் பிரியன்; பறவைகளை, பூச்சிகளை, விலங்குகளை, ஊர்வனவற்றை எல்லாம் தத்ரூபமாகப் படம் பிடிப்பதில் அலாதிப் பிரியமுடையவன். மரணத்தைத் தழுவிய அன்றைய பின்னேரப் பொழுதில் ஓணான் இனப் பிராணி ஒன்றை படம்பிடித்துக் கொண்டிருந்தவரோடு நானும் வாணியும் இணைந்திருந்தோம்.

அப்போது வாணி தான் எடுத்த புகைப்படங்களைக் காட்டிய போது புகைப்படங்களை ஆர்வத்தோடு பார்த்துப் பாராட்டினார்.

அதுவே அவரது கடைசிப் பாராட்டாகவும் படப்பிடிப்பாகவும் போகும் என்று அப்போது அவரோ, நாங்களோ நினைத்திருக்கவில்லை.

ஏனோ தெரியாது ரவிக்கு என்மேல் ஒரு தனிப்பட்ட பிரியமும் நம்பிக்கையும் இருந்ததை நான் பலதடவை உணர்ந்துள்ளேன். நானும் பலரையும் போல ரவியைக் கண்டது

சென்னையில்தான். நான் தோழர் பத்மநாபாவோடு தி நகர் பாலன் இல்லத்தில் அவரது பிரத்தியேகத் தொலைத்தொடர் பாளராக இருந்த சமயங்களில் அங்கு அடிக்கடி வரும் ரவிக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. அவரது நிமிர்ந்த நடையும், அழகிய வதனமும் இன்னும் என் மனக்கண் முன் நிழலாடுகிறது.

அப்போதைய காலங்களில் என்னவெல்லாம் பேசினோம் என்பது பெரிதாக நினைவில்லை. என் தொலைத்தொடர்பு விடயங்களில், கருவிகள் பற்றிய டெக்னிகல் பக்கங்களை சொல்லித்தந்தது நினைவிருக்கிறது.

பிற்காலங்களில்தான் அதிகம் அரசியல் பேசியிருக்கிறோம். கட்சி வளர்ச்சி பற்றிப் பேசியிருக்கிறோம். சென்னை வரும் போதெல்லாம் அவர் சந்திக்க விரும்பும் பட்டியலில் முக்கியமாக நான் இருந்திருக்கிறேன். நான் பொருளாதர நெருக்கடிகளில் இருந்தகாலங்களில் எனக்கு கைகொடுத்து உதவிய உற்றதோழனாக அவர் இருந்தார். சென்னையில், முகாம்களில் வாழ்ந்த தோழர்களின் ஆரோக்கியத்தின் மீது அதிக கரிசனை கொண்டிருந்தார். பல தடவைகள் என்னூடாகப் பண உதவிகளும் செய்திருக்கிறார். அத்தகு பல்பரிமாணத்தை தன்னகத்தே கொண்டியங்கிய ஒரு இனியவனைக் காலம் எம்மிடம் இருந்து பிரித்தது ஒரு நியாயமற்ற செயலாகவே என்னால் உணரப்படுகிறது.

அவரும் நானும் இணைந்து பணியாற்ற நினைத்த பலவிடயங்கள் கனவாகவே கரைந்து போய்விட்டது. காலத்தின் கயமைகளை யாரொடு நோவோம்.

இனியதோழனை இழந்த துயரில் இருந்து அவரது குடும்பமும் நாமும் தோழர்களும் மீள சில காலங்கள் ஆகலாம். ‘மரணம் வாழ்வின் முடிவல்ல’ என்ற மகாவாக்கியத்தின் மீதான நம்பிக்கையோடு, எமது தோழனின் மீள் வரவுக்காய் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பது ஒன்றே இப்போது எனக்குத் தெரிந்த வழி.



kamalakaran.n@thaiveedu.com








# நினைவுகளில் அழிக்க முடியாத தம்பி நண்பன் தோழன்

## ரவி பொன்னுத்துரை

– யோகா வளவன் தியா

1967 பெப்பிரவரியில் இலங்கையின் யாழ்ப்பாணம், 'திருநெல்வேலி' கிராமத்தில் பிறந்த ரவி பொன்னுத்துரையின் வாழ்க்கைப் பயணம், இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கைகளால் 1984-இல் தமிழகத்தை நோக்கி இடம்பெயர வைத்தது. அங்கு உயர்வகுப்புக் கல்வியை (+2) கற்று கொண்டிருந்த காலகட்டத்தில், ஈழவிடுதலைக்கான போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொள்ளும் முகமாக 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்' மாணவர் அமைப்பாகிய 'ஈழமாணவர் பொதுமன்றத்தில்' தன்னை இணைத்து கொண்டார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையில் 1988-ஆம் ஆண்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபை உருவாகிய போது, அவரது கடுமையான உழைப்பும் அர்ப்பணிப்பும் சென்னையில் ஈபிஆர்எல்எப் (EPRLF) அலுவலகத்தைப் பொறுப்பெடுத்து நடத்தும் நிலமையை உருவாக்கிக் கொடுத்தது.

பின்னர், தனது தனிப்பட்ட வாழ்க்கைக்கான போராட்டம் அவரை 1990-இல் அகதியாக புலம்பெயர வைத்தது. பல தடைகளைத் தாண்டி தன்னம்பிக்கையுடன் வாழ்கையை எதிர் கொண்ட அவர், ரொறன்ரோவில் குடியேறி, எரிபொருள் விற்பனை நிலையமொன்றில் பகுதி நேரமாக வேலை செய்து கொண்டு, சென்னையில் இடைநிறுத்தப்பட்ட பாடசாலை உயர்கல்வியை நிறைவு செய்தார்.

பின்னர் கார்ல்டன் பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியலைப் படித்துப் பட்டம் பெற்று, நோட்டல் (Nortel Ltd) நிறுவனத்தில் 2003-ஆம் ஆண்டுவரை பணியாற்றினார். தொடர்ந்து 30 வருடங்கள், ஊடகத்துறை, காப்புறுதி, வீடு விற்பனை முகவர் (Real Estate) என்று பல்வேறுபட்ட துறைகளில் பணியாற்றி இறுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் ஆய்வுகளுக்குத் தன்னை மாற்றிக்கொண்டார். இந்த மாற்றமே அவரது கல்வி அறிவு மற்றும் உலகம் பற்றிய பார்வையில் புதிய பரிணாமத்தை உருவாக்கியது.

**அவரது இழப்புப் பற்றி யோர்க் பல்கலைக்கழக சமூகம்:**

*'ரவிசந்திரநேசன்(ரவி) பொன்னுத்துரையின் வாழ்க்கையை யோர்க் பல்கலைகழக சமூகம் கொண்டாடுகிறது. அவர் ஓர் அர்ப்பணிப்பான மாணவர், ஆர்வமிக்க சுற்றுச்சூழல் ஆர்வலர் என்பதோடு, பலருக்கு நண்பராகவும் இருந்தவர். 57 வயதில், இலங்கைக்குப் பயணம் செய்துகொண்டிருந்தபோது பொன்னுத்துரையின் எதிர்பாராத மரணம் ஓர் ஆழமான வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*2018-இல் யோர்க் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த ரவி பொன்னுத்துரை உலகில் உண்மையான மாற்றத்தை உருவாக்கும் வேட்கையால் உந்தப்பட்டவர். சுற்றுச் சூழல் நிலைத்தன்மையின் (Environmental Sustainability) மீதான அவரது அர்ப்பணிப்பு அவரது வாழ்க்கைப் பணியின் மையமாக அமைந்தது. 2022-ஆம் ஆண்ட ளவில், 'சுற்றுச்சூழல் ஆய்வுகளில் இளங்கலை பட்டம் (BES)' பெற்றார். பின்னர் 'சூழலியல் அடையாளங்கள் மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை' குறித்து ஆராயும் 'முதுகலைப் பட்டம் (MES)'ஆய்வில் முழுமையாக ஈடு பட்டார். ஒன்ராரியோவின் நாபனீக்குக் (Napanee) குடி பெயர்ந்தபோதும் பொன்னுத்துரையின் அர்ப்பணிப்புத் தளரவில்லை. தனது படிப்பைத் தொடரவும் கல்விச் சமூகத்துடன் இணைந்திருக்கவும் அவர் வாரந்தோறும் பல மணிநேரம் பயணம் செய்து வந்தார்.*

*ரவி பொன்னுத்துரையின் வாழ்க்கையும் நினைவும், நாம் ஒன்றாகக் கற்றுக்கொண்டு, சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கான வழிகாட்டி விளக்காகத் தொடர வதாகுக!'*

என்று யோர்க் பல்கலைக்கழக சமூகம் தமது அஞ்சலி குறிப்பில் எழுதியுள்ளது.

கனடாவுக்கு நான் 2001-ஆம் ஆண்டில் Landed Immigrant-ஆக வந்து இறங்கிய போது, ஓட்டோவாவில் இருந்து ரொறன் ரோவுக்கு அடிக்கடி நீண்ட தூரம் கார் பயணம் செய்து வந்து, என்னைச் சந்தித்து, அரசியல் பேசுவது என்று சென்ற நிலையில், ரவியும் தோழர் வில்சனும் நானும் இணைந்து பேசி முடிவெடுத்து, வைகறை என்ற பெயரில் ஒரு வாராந்த பத்திரிகையை ஆரம்பிப்பது என முடிவு எடுத்தோம்.

அதன்படி 2004-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8-ஆம் திகதி வைகறை பத்திரிகையின் முதலாவது இதழ் வெளியிடப் பட்டது. அன்றில் இருந்து, 2008 ஒக்ரோபர் மாதம் வரை தொடர்சியாக இடை விடாது வாராவாரம் ஒவ்வொரு வியாழக் கிழமையும் வைகறை பத்திரிகை வெளிவந்தது என்றால், அதற்கான கடின உழைப்பும், அர்பணிப்பும் ரவியையே சாரும். அதுவரை எமது அரசியல் கட்சி உறுப்பினர்கள், ஆத ரவாளர்கள் மத்தியில் 'GUES ரவி' என அழைக்கப்பட்டு வந்த ரவி, பின்பு ஊடகவியலாளர்கள், வாசகர்கள் மத்தியில் 'வைகறை ரவி' என அழைக்கப்படலானார்.

அவரை முன் நிறுத்தி, அவரின் பின்னால் தோழர் வில்சனும் நானும் இயங்கிய அந்த நான்கு வருடகாலங்களும் எங்கள் வாழ்கையில் மறக்க முடியாத தருணங்கள்.

சிறந்த ஊடக தர்மத்துடன், ஜனநாயகப் பண்புகளைப் பேணியபடி, இலங்கை, இந்திய, கனடிய, உலகச் செய்தி களைக் கொடுத்தபடி, குறிப்பாக ஆக்கங்களுக்கு இடையில் மட்டும் ஆங்காங்கே விளம்பரங்களைத் தாங்கி வெளிவந்த பத்திரிகை வைகறை.

வாரா வாரம் அதனை கொண்டு வருவதில் நாம் எதிர் கொண்ட சிரமங்கள் ஏராளம். நிதி நெருக்கடி ஒருபுறம் என்றால், மறுபுறம் பத்திரிகையின் குரல்வளையை நசுக்க முற்பட்டவர்களின் அச்சுறுத்தல்கள். இவற்றை எல்லாம் எம்மால் சமாளிக்க கூடியதாக இருந்தது என்றால், அதற்கு முழுமுதல் காரணம் ரவி என நான் கூறுவது மிகைப்பட்ட கூற்று அல்ல என்பதை, வைகறை நண்பர்கள் அனைவரும் அறிவர்.

வைகறை பத்திரிகை பற்றியும், ரவி பற்றியும், சமூக அரசியல் செயற்பாட்டாளரான சபேசன் அவர்கள் தனது அஞ்சலிக் குறிப்பில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

*'EPRLF-இன் மாணவர் அமைப்பில் இணைந்து தனது பொது வாழ்க்கையை ஆரம்பித்த ரவி, கனடாவில் 'வைகறை' வாரப்பத்திரிகையினை வெளியிடுவதில் முதன்மைப் பாத்திரம் வகித்தவர். இவரது உள்ளார்ந்த அரசியல் பாத்திரம் என்பது தமிழ்த் தேசிய அரசியலில் எவ்வகைப்பட்டதாக அமைந்திருந்தாலும் வைகறை யானது அன்றைய நாட்களில் ரொறன்ரோவில் நிலவிய ஜனநாயக வெற்றிடத்தினைக் கருத்திற் கொண்டு பல தரப்பினரின் கருத்தினையும் உள்ளடக்கியே வெளி வந்தது.*

*இலங்கையில் சமாதானத்திற்கான கனடியர்கள் என்ற அமைப்பானது இலங்கையில் யுத்தம் நடந்த காலங் களில் ரொறன்ரோவில் ஆரம்பமாகியது. அதன் நோக்கமாக பிரதான கனடிய அரசியல்வாதிகள், கனடிய ஜனநாயக வாதிகள், கனடிய தமிழ் மக்கள் போன்றோரின் ஆதரவைத் திரட்டி இலங்கையில் 'புலிகள் - சிங்கள அரசு' என்பவற்றிடையே நடைபெற்ற யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவர செயற்படும் வேலைத்திட்டமாகும்.*

*அன்றைய காலகட்டத்தில் இந்த நோக்கத்திற்காக ஊடகம்/பத்திரிகை என்ற வகையில் எமக்கு பணத் தையும் வேறு பலாபலன்களையும் எதிர்பாராமல் வெளியிட்டு பெருமளவில் உதவியது வைகறை என்பது உண்மையே.*

**2018-இல் யோர்க் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த ரவி உலகில் உண்மையான மாற்றத்தை உருவாக்கும் வேட்கையால் உந்தப்பட்டவர். சுற்றுச்சூழல் நிலைத்தன்மையின் மீதான அவரது அர்ப்பணிப்பு அவரது வாழ்க்கைப் பணியின் மையமாக அமைந்தது. 2022-ஆம் ஆண்டளவில், 'சுற்றுச்சூழல் ஆய்வுகளில் இளங்கலை பட்டம்' பெற்றார். பின்னர் 'சூழலியல் அடையாளங்கள் மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை' குறித்து ஆராயும் முதுகலைப் பட்டம்' ஆய்வில் முழுமையாக ஈடுபட்டார்.**

றொறன்றோவில் இலங்கைத் தமிழ்மக்களின் பரம்பல், வருகை என்பது பெருமளவில் எண்பதுகளின் ஆரம் பத்தில் தொடங்கியது. அப்பொழுதில் இருந்தே 'ஈழத் தமிழ்த் தேசியத்தின்' பொது நீரோட்டமாகிய தமிழர் கூட்டணியின் பாரம்பரிய அரசியல் கோசம் என்பதைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளின் அரசியல் கலாச்சார வெளிப்பாடுகளகவே பத்திரிகைகள், தொலைக்காட் சிகள் போன்ற ஊடகங்கள் வெளிவந்தன; வந்து கொண்டிருக்கின்றன; வர்த்தக நிறுவனங்கள், கடைகள், கோவில்கள் என்பன உட்பட.



மிகக் குறைந்த வீதமான மக்களே றொறன்றோவில் 'மாற்று அரசியல்' என்ற தேவையை உணர்ந்து செயற் பட்டனர். பிற்காலங்களில் இந்த 'மாற்று' என்ற அரசியல் கலாச்சாரத்தைச் சிலர் வெற்று 'புலி எதிர்ப்பு' வாதத்திற்குள் குறுக்க முயற்சித்தனர். பிரதானமாக புலிகளை எதிர்ப்பது என்ற கருத்தாக்கத்தைத் தாண்டி இனவாத சிங்கள அரசினை ஆதரிப்பவர்களும் இந்த மாற்று அரசியல் என்ற பதத்தை பாவிக்கத் தொடங் கினர். உண்மையில் 'மாற்று அரசியல்' என்பதன் கருத்து சமூகத்தில் பிரதிபலிக்கும், பிரதான மைய நீரோட்டத்தில் நிலவும் பிற்போக்குவாதத்திற்கு எதிரான அரசியல், கலாச்சாரக் குரலாகும்.

றொறன்றோவில் வெளிவந்த சிறு சஞ்சிகைகள், பத்திரி கைகள் என்பனவறில் இந்த மாற்று அரசியல் கலாசா ரத்தை 'வெற்று புலி எதிப்பு வாதத்தை' வெளிப்படுத்து பவையாகவே வெளிவந்தன.

வைகறை வாரப் பத்திரிகையானது இந்த வகையறாக்களிற்குள் அகப்படாமல் அனைத்து வகையான ஜனநாயக அரசியலையும் தாங்கி வெளிவந்தததது. அதாவது புலி எதிர்ப்பு அல்லது அரச எதிர்ப்பு என்பதனைத் தவிர்த்து உண்மை யான மாற்று என்றதன் அர்த்தத் தினைப் பிரதிபலித்தது.

அன்றைய நாட்களில் கருமையம், மனவெளி, இலங்கையில் சமாதானத்திற்கான கனடி யர்கள் போன்ற அமைப்புகள் செயற்பட்ட காலங்களில் எமது விளம்பரங்களையும் விமர்சனங்களையும் துணிவுடன் வெளியிட்டு உதவியது வைகறை. இதற்கான பிரதானமான பாத்திரத்தினை வகித்தது வைகறை ரவி என்ற ரவிச்சந்திரநேசன்.'

கடந்த 2024-ஆம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற இலங்கை ஜனாதிபதி தேர்தலிலும், நவம்பர் 14-ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல்களிலும், ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருந்த நிலையில், என்னைப் போன்றவர்களும் இடதுசாரி சிந்தனை உள்ளவர்கள் பெரும்பாலா னோரும் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை வரவேற்று சிலாகித்துக் கொண்டிருந்த வேளையில், இலங்கையில் புதிய ஆட்சி மாற்றம் தொடர்பாக ரவியின் கருத்து மிகவும் ஆழமா கவும் ஆணித்தரமாகவும் அமைந்திருந்தது. நான் மெதுவாய்த் தான் வருவேன்... அதில் தப்பேதும் இல்லை. என்ற தலைப்பில் ரவி பின்வ ருமாறு எழுதினார்:.

நான் மெதுவாய் தான் வருவேன்...

அண்மையில் நான் ஊர் சென்று இருந்த பொழுது என்னுடன் கனடாவில் வந்து இருந்த வர்களுடன் ஆரியகுளம் அருகாமையில் உள்ள விகாரைக்கு சென்று இருந்தேன். நாங்கள் உள்ளே நுழையும் பொழுது விகாரையின் வாசலில் இளநீர் விற்றுக்கொண்டு இருந்த 70 வயது மதிக்கத் தக்க ஒருவர், எங்களைப் பார்த்து எங்களின் காலணி களை வாசலில் கழட்டி வைத்துவிட்டு போகும்படி கூறினார். நான் தயங்கிய பொழுது அவர் என்னிடம் கூறினார் 'தம்பி உன் shoe களவு போனாலும் பரவாயில்லை, அவர்களின் மதத்தை, நம்பிக்கையை

*நாம் மதிக்கனும். அதுக்காய் உன் shoe-வை கூட இழக்கலாம். ஒன்றும் குறைந்து விடப்போவது இல்லை'...*

•

*நல்லூர் திருவிழா பார்க்கப் போய் இருந்தேன். மத நம்பிக்கைகளோ, கடவுள் நம்பிக்கையோ இல்லாதவன் என்றாலும் சிறுவயது நினைவுகளின் உந்தலால் சென்றேன். இம்முறை 'அரோகரா' என்று, வந்து இருந்தவர்களின் சத்தம் எனக்குள் ஒரு சமூகத்தின் 'symbol of resilence' கோசமாகத்தான் இருந்தது. இதற்கு முன்தினம் தான் திருவிழா காரணமாக வாகனங்களுக்கு விதிக்கபட்ட தடைகளையும் மீறி, தடுத்தவர்களையும் மீறி புத்தபிக்குவின் வாகனம் உள் நுழைந்து இருந்த செய்தியை அறிந்து இருந்தேன்.*

*கோயிலை விட்டு நாம் வெளியில் வரும் பொழுது வெளியே செல்வதுக்கு வாசலில் இருந்த காவல் அதிகாரிகளிடம் வழி கேட்ட பொழுது, அவர்களுக்கு சிங்கள மொழி மட்டுமே தெரியும் என்பதை அறிய முடிந்ததும் ஏதோ ஒரு உணர்வு எனக்குள் இருந்து வெளியேறி என்னைத் தோற்று போன சமூகத்தின் எச்சமாய் கூச வைத்தது.*

•

*1988-89-இல் தயான் ஜெயதிலகா என்ற சிங்கள இடது சாரி, முற்போக்குவாதியை பார்த்து பூரித்து புதிய இலங்கை வெகு தூரம் இல்லை என்று சக தோழர்கள் போலவே நானும் கனவு கண்டேன். பின்பு தயான் ஜெயதிலகா தனது கல்விப் புலமையை ஸ்ரீலங்கா அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளை நியாயப்படுத்த பயன்படுத்தியது வேறு கதை.*

•


*89-களின் ஆரம்பத்தில் ISU சேர்ந்த என் சிங்கள தோழன் ஒருவன் JVP-ஆல் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட பொழுது, அவனோடு இருந்த அறையில் இருந்து 'ஓ' என்று அழத்தான் முடிந்தது. பின் நிச்சு பிறந்தவுடன், நிச்சுக்கு அவனுடைய middle name ஆக காணமல் ஆக்கபட்ட தோழனின் பெயரை வைத்து எனக்கு நானே இன ஐக்கியத்தை நிறுவிக்கொண்டேன்.*

•

*இந்தவாரம் புத்தபிக்குகள் தேசிய கீதம் இசைக்கும் பொழுது எழுந்து நின்றதைப் பார்க்கும் பொழுது இனி இது ஒரு புத்த தேசம் இல்லை... எல்லோருக்குமான தேசம் என்றும் மக வம்சம் மாற்றி எழுதப்படும் என்றும் என்னை என் நண்பர்கள் கொண்டாட வரும்படி சொல்கிறார்கள்... நான் மெதுவாய் தான் வருவேன் தோழர்களே... தப்பில்லை தானே ?*

மேற்படி அவரது பதிவு இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் பற்றி தெரிவித்தது. கடந்த ஜனவரி மாதம் 22-ஆம் திகதி தான் கலந்து கொண்ட சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான ஜூம் (Zoom) கூட்டம் தொடர்பான தகவலை என்னுடன் பகிர்ந்து கொண்டு, தொலைபேசியில் பேசிய போதும் அதன் பின்னரும் அடிப்படையில் ஓர் IT பட்டதாரியான ரவி, அரசியல், சமூகம், ஊடகம் என்பற்றில் முத்திரை பதித்துப் பின்னர் சுற்றுச் சூழலியலில் பட்டப்படிப்பையும் முடித்து இலங்கையை மையப்படுத்தி சர்வதேச அளவில் சுற்றுச் சூழலியலில் தன்னை நிலைநிறுத்த முட்பட்டிருப்பதை நன்குணர்ந்து அவனது விடாமுயற்சியையும், திறமையையும் எண்ணி வியந்ததோடல்லாமல், தொடர்ந்தும் இப்படியே முன்னேறு என்று வாழ்த்தும் கூறினேன்.

ஆனால் இரண்டு நாட்கள் கழித்து ஜனவரி 24-ஆம் திகதி மதியம் 3.30 PM EST வந்த செய்தி என்னை நிலைகுலையச் செய்துவிட்டது. கனடிய, தமிழ் அச்சு ஊடக வரலாற்றில் பெரும் சாதனை படைத்த வைகறை ரவி இன்று எம்முடன் இல்லை.



அவன் கனவுகள், ஒரு போதும் வீண் போகாது என்று மட்டும் இப்போது சமாதானம் சொல்லிக் கொள்ள முடிகின்றது. என் நினைவுகளில் அவன் என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பான்.



yoga.valavan@thaiveedu.com



# உயரப்பறந்த தனிப்பறவை

**– தர்சன்**

அந்த அந்திப் பொழுதில் வந்த தொலைபேசி அழைப்பி னூடாகத்தான் அந்தத் துயரச் செய்தியும் வந்து சேர்ந்தது.

‘ரவி இறந்துவிட்டார்’ என்று நண்பர் மீராபாரதி என்னிடமும் நண்பர்களிடமும் அந்த அழைப்பில் கூறியபோது மனம் உறைந்து மீண்டது. முழு நிலவின் பின்னணியில் தனிப் பற வையொன்று பறக்கும் காட்சி நினைவிலிருந்து மேலெழுந்து வந்தது.

இந்த காட்சியைக் கொண்ட படத்தை இந்த வருடத்தின் முதல் நாளில் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வாழ்த் துகளைத் தெரிவிக்க தனது ‘பேஸ்புக்’ பக்கத்தில் ரவி பகிர்ந் திருந்தார். அத்துடன் மாயா ஏஞ்சலோவின் ‘But still, like air, I’ll rise’ (‘ஆனால், இன்னும் காற்றைப்போல, நான் எழுவேன்’) என்ற வரிகளையும் பகிர்ந்திருந்தார்.

‘ஏன் இந்த முழு நிலவின் பின்னணியில் தனிப் பறவை பறக்கும் காட்சியை எங்களுடன் பகிர்ந்தார்?’ என்று யோசித்திருக்கிறேன். தனது தனியான பயணத்தையும் அதனைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு தனக்கிருக்கும் மன உறுதிப்பாட்டையும் எங்களுக்கு உணர்த்த விரும்பினாரோ என்று யோசிக்கத் தோன்றியது.

ரவியில் எப்போதும் தீவிரத்தன்மையொன்று இருப்பதை உணர்ந்திருக்கிறேன். அது அவரது ஈழ விடுதலைக் கால இயக்கப் பின்னணியிலிருந்து வந்தது என்றுதான் நினைக்கிறேன். புலிகள் அதிகாரத்தின் உச்சத்திலிருக்கும்போது அவர்களை விமர்சனரீதியாக அணுகி வைகறைப் பத்திரிகையை வெளியிடும் முயற்சியில் அவரது தீவிரத்தன்மையை உணர்ந்திருக்கிறேன். சுற்றுச்சூழல் சம்பந்தமாக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் அவரது தீவிரத்தன்மையை உணர்ந்திருக்கிறேன். ஏன்? நண்பர்களுடன் கோடை காலத்தில் நாங்கள் செல்லும் ‘camping’-இல் கூட அவரது தீவிரத்தன்மையை அவதானித்திருக்கிறேன். தன்னிடம் கேட்கப்படும் ஒரு பொருளைத் தருவதற்காகவே ‘camping’ வந்து குறுகியகாலத்தில் திரும்பிச் சென்றிருக்கிறார். இதனால், ‘பச்சைமிளகாய் தருவதற்கு காம்பிங் வந்திட்டு போகுது, ரவி’ என்பது போன்ற நண்பர்களின் பகடிகளுக்கும் ஆளாகியிருக்கிறார்.

ஆனால், தீவிரத்தன்மையில் இயங்கும் பலரைப்போல ரவியும் அவரது தீவிரமான செயற்பாடுகளுக்கு நிறைய விலையைக் கொடுத்திருக்கிறார். அவர் தனிமையை உணர்ந்ததற்கும் அவரது தீவிரத்தன்மையும் ஒரு காரணமென்று நினைக்கிறேன். அவரது அகாலமான மறைவுக்கு இந்தத் தீவிரத்தின் தீயும் நிச்சயமாக ஒரு காரணமாக அமைந்திருக்கும் என்றுதான் நம்புகின்றேன்.



ரவியைப்பற்றி தொண்ணூறுகளிலேதான் நான் முதலில் கேள்விப்பட்டேன். நான் ‘ஒட்டவா’ நகரில் கல்வி கற்றுக்கொண்டிருந்தேன். போர் என்ற வடிவத்தில் ஈழப்போராட்டாம் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். கால்ற்றன் பல்கலைக்கழகத்தில் ஏறத்தாள ஒரு முன்னூறு தமிழ் மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். எனக்குத் தெரிய அனைவருமே விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்கள். விதிவிலக்குகள் ஒருசிலர்தான். அவர்களும் தமது கருத்துகளை வெளிப்படையாக சொல்லத் தயங்குபவர்கள். ஊடகச் சுதந்திரம், மனித உரிமைகள் போன்றவற்றிற்கு எதிராக புலிகள் விடுத்த அச்சுறுத்தல்கள், மாற்றுக் கருத்தாளர்கள் மீது புலிகள் நிகழ்த்திய வன்முறைகள் சம்மந்தமாக எவரும் பொது வெளியில் கதைக்க முன்வருவதில்லை. இந்தச் சூழலில் கால்ற்றன் பல்கலைக்கழத்தில் கல்விகற்ற ரவி புலிகளின் இந்தச் செயற்பாடுகள் தொடர்பாக பல்கலைக்கழகத்தில் இயங்கும் மனித உரிமை அமைப்புகளுடன் உரையாட முற்பட்டிருக்கிறார். ரவியின் இந்தச் செயற்பாடு காரணமாக அவர் ஈழப் போரட்டத்திற்கு எதிரானவராகத் துரோகியாக விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் அடையாளப்படுத்தப்பட்டார். ஈழ விடுதலைப் போராட்டங்களில் பங்களித்தவர் பலரையும், போரிலிருந்து தப்புவதற்காகப் பாதுகாப்புத் தேடி வெளி நாடு வந்த புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் இவ்வாறு அடையாளப்படுத்துவது ஒன்றும் புதிதில்லை என்பதை அப்போதே நான் அறிவேன். இந்த அடையாளங்களுக்கூடாகவே ரவியை நான் முதலில் அறிந்தபடியாலோ என்னவோ தெரியவில்லை, ரவியைத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் கொண்டிருந்ததாக ஞாபகம். ஆனால், ரவியுடன் எனக்கு அப்போது பழக வாய்ப்புக் கிடைக்கவில்லை.

ரவியுடனான எனது தொடர்பு எனது நண்பர்கள் பலரைப்போல வைகறை பத்திரிகையூடாகவே ஆரம்பித்தது. ஓவியரான நண்பர் கருணா அந்தக் காலத்தில் வைகறையின் வடிவமைப்பை மாற்றியமைக்க உதவிக்கொண்டிருந்தார். அவர் என்னையும் நண்பர் சக்கரவர்த்தியையும் வாரவாரம் வெளிவரும் பத்திரிகைக்கு பத்திகள் எழுதித்தருமாறு அழைத்திருந்தார். வைகறைக்குப் பத்தியெழுதுவதினூடாகவே ரவியுடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது.

அப்போது ரொறொன்ரோவில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகைகளில் பெரும்பாலானவை விடுதலைப் புலிகளை ஆதாரித்தவை அல்லது அவர்களைப் பற்றிய அபிப்பிராயங்களை வெளியிடாமலிருந்தவை. புலிகளின் மீது சிறிய விமர்சனத்தை வெளியிடவும் தயக்கம் காட்டியவை. விமர்சனம் எதனையும் வெளியிட்டால் பொருளாதாரரீதியான பாதிப்புகளைச் சந்திக்கவேண்டிவரும் என்பதிலிருந்து அச்சுறுத்தல்களுக்கும் வன்முறைகளுக்கும் முகங்கொடுக்க நேரிடும் போன்ற அச்சமும் அவற்றிற்கான காரணங்களாக அமைந்திருந்தன.

இந்தச் சூழலில்தான், விடுதலைப் புலிகளின் போராட்ட வழிமுறைகளை விமர்சனரீதியாக அணுகிய வைகறைப் பத்திரிகையை வாரவாரம் கொண்டு வருவதற்கு ரவி தனது கடுமையான உழைப்பை வழங்கியிருந்தார். அந்தப் பத்திரிகை சமூகத்தின் பல்வேறு குரலைக் கொண்ட ஒரு பத்திரிகையாக வரவேண்டும் என்பதில் கவனத்தைச் செலுத்தியிருந்தார். அவரது அரசியல் நிலைப்பாட்டை, அவர் சார்ந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை விமர்சித்த ஆக்கங்களையே அவர் பிரசுரித்திருக்றார். விடுதலைப் புலிகள் ஆதரவு நிலைப்

**வைகறைப் பத்திரிகை அந்திமத்தை எட்டிய பின்பு, ரவியின் ஆர்வம் சுற்றுச் சூழலை நோக்கியும் புகைப் படக்கலை நோக்கியும் நகர்ந்திருந்தது. எதைக் கையிலெடுத்தாலும் தீவிரத்துடேனே பறக்கும் தனிப்பறவை இந்த வெளிகளிலும் உச்சங்களைத்தொட முனைந்தது.**

பாட்டை கொண்டோரது பேட்டிகள் வைகறையில் வந்திருக்கின்றன. அந்த வகையில் வைகறை கனடிய ஈழத் தமிழ்ச் சூழலின் ஜனநாயக வெளியைத் தொடர்ச்சியாக பேணுவதற்கு தனது பங்கை ஆற்றியிருக்கிறது. இதற்கு மூலகாரணமாயிருந்தவை ரவியின் துணிவும், அர்ப்பணிப்பும், கடுமையான உழைப்புமேயாகும்.

வைகறைப் பத்திரிகை அந்திமத்தை எட்டியபின்பு, ரவியின் ஆர்வம் சுற்றுச் சூழலை நோக்கியும் புகைப்படக்கலை நோக்கியும் நகர்ந்திருந்தது.

எதைக் கையிலெடுத்தாலும் தீவிரத்துடேனே பறக்கும் தனிப் பறவை இந்த வெளிகளிலும் உச்சங்களைத் தொட முனைந்தது.

சுற்றுச்சூழல் துறையில் அவர் தனது இரண்டாவது மேற்படிப்பை மேற்கொண்டிருந்தார். அந்தத்துறையினூடாகச் சமூகத்திற்கும் இயற்கைக்கும் பயனளிக்கும் பொதுவேலைகளில் ஈடுபட்டிருந்தார். இயற்கையின் சமநிலையைப் பேணுவதற்கான 'அன்னியக் களைகளை அகற்றுதல்' போன்ற நடவடிக்கைகளை ரவி ஒருங்கிணைத்திருந்தார். அவரது தீவிரம் அவரைச் சில பொழுதுகளில் தனித்தே விட்டிருந்தாலும், இவ்வாறான வேலைகளுக்கு பல்வேறு கருத்துநிலைகளைக் கொண்டிருந்தவர்களை அழைப்பதற்கும் ஒருங்கிணைப்பதற்குமான பண்பும் பக்குவமும் அவரிடம் இருந்தன.

சுற்றுசூழல் சார்ந்த படிப்பிலும் நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபட்டிருந்தபோது கோஸ்ற றீக்கா (Costa Rica) போன்ற இடங்களில் அவருக்கு அந்த நாட்டுப் பூர்வீக மக்களுடன் பழகும் வாய்ப்பும் அவர்களது சிந்தனைகளுடனான அறிமுகமும் கிடைத்திருக்கிறது. காலனித்துவ நீக்கம் சம்மந்தமாக அவர்கள் எங்களுடன் ஒப்பிடும்போது, பெரும்பாய்ச்சலை நிகழ்த்தியிருப்பதாகக் கூறியிருந்தார். அவர் கற்றுக்கொண்ட விடயங்களை ஈழத்துச் சூழலில் பிரயோகப்படுத்தும் ஆர்வத்தைக் கொண்டிருந்தார்.

இவ்வாறான ஆர்வமும் ஈடுபாடுகளும்தான் தனிப் பறவை தொடர்ந்து பறக்க உந்து சக்திகளாக அமைந்தன.

நண்பர்களுடன் செல்லும் கோடைகால 'காம்பிங்கை' ரவி ஒரு தடவையேனும் தவறவிட்டதாக எனக்கு ஞாபமில்லை. ஒரு நாளைக்கேனும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொள்வார். கேலியும், கிண்டலும், உரையாடலுமாக நீளும் பொழுதுகளில் பங்கெடுத்துக்கொள்வார். பிற்காலங்களில் கமராவும் கையுமாகத் திரிவார். 'மறைந்த ஓவியர் கருணாவின் ஆவிதான் ரவிக்குள் புகுந்து விட்டதாக...' நண்பர்களிடம் கூறிச் சிரித்திருக்கிறேன். சுற்றியிருக்கும் இயற்கையையும் நண்பர்களான எங்களையும் அவர் எடுத்த புகைப்படங்களும் அந்தக்கால 'காம்பிங்க்' கதைகளைச் சொல்வன.

கடந்த ஆண்டு கோடை காலக் 'காம்பிங்'கில்தான் நான் இறுதியாக ரவியை நேரே சந்தித்து உரையாடியது. வழமைபோல அரசியல், வரலாறு, இலக்கியமெனச் சென்றன எமது கதைகள். ஈழத்து அரசியல் அரங்கில் அவர் சார்ந்திருந்த கட்சியின் முன்னெடுப்புகள் பற்றிக் கூறிக்கொண்டிருந்தார். அவர் கூறிக்கொண்டிருந்த முயற்சிகளில் எனக்கு உடன்பாடிருக்கவில்லை. ஆனால், நான் சிரித்துகொண்டே கேட்டுக்கொண்டிருந்தேன். ரவி என்றும் மாறாத் தீவிரத்துடன் இறுதிவரை அந்த முயற்சிகளில் ஈடுப்பட்டிருந்தார் என்பதை நான் அறிவேன்.

உயிரிழந்த ரவியைப் பார்க்கச் சென்ற இருள் கவிழ்ந்த பொழுதில் ஆகாயத்தைப் பார்த்தேன். தேய்ந்த நிலவின் அருகில் தனித்துப் பறந்த பறவை நட்சத்திரமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது.

நிலவையும், தனிப் பறவையையும், நட்சத்திரத்தைக் காணும் போதெல்லாம் இனி ரவியின் நினைவுகள் மலர்ந்துகொண்டேயிருக்கும்.



dharsan@thaiveedu.com




reakfast & lunch




Ravi Ponnudurai





# வைகறை இரவியாக மாறிய GUES இரவி



– ஜேம்ஸ்

**வை**கறை ரவி என்று பலராலும் அறியப்பட்ட ரவிச்சந்திர நேசன் பொன்னுத்துரை அவர்களின் நினைவுகளைப் பற்றிய குறிப்புகளை நட்பின் அடிப்படையில் வெளிப்படுத்த என்று முயல்கின்றேன். என்னைவிட பத்து வயதுக்கு மேல் குறைந் தவர் அவர். யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள பணிக்கர் வளவு வீதியில் அவரது தாய்மனை இன்னமும் இருக்கின்றது. தாயகத்தில் அவருக்கான இறுதி அஞ்சலி நிகழ்வும் இங்குதான் நடைபெற்றது. இதில் பல்வேறு அரசியல் ஆளுமைகளுடன் நானும் கலந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது.

இந்தவீதி எம் எல்லோருக்கும் மிகவும் பரிச்சயமானது. இங்குதான் 1983-ஆம் ஆண்டு நடைபெற்ற தாக்குதலில் 13 இராணுவத் தினர் கொல்லப்பட்டனர், படுகொலைகள் நடந் தேறிய தபால்பெட்டி ஒழுங்கைக்கு எதிராக, கிழக்குப் பக்க மாகச் செல்லும் ஒழுங்கை இது. இவ்வீதி பலாலி வீதியில் இருந்து ஆரம்பிக்கின்றது. யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் அடையாளங்களில் ஒன்று இந்த தபால்பெட்டி ஒழுங்கை அல்லது கம்பஸ் வீதி. 1980-களின் நடுக்கூறுக்கு அண்மையாக ஊரெல்லாம் அடங்கியிருக்கும் ஊடங்குச்சட்ட நேரம், தற் போது தமிழ் அரசியல் பரப்பில் பிரபல்யமாய் இருக்கும் சுரேஸ் பிரேமசந்திரன் உடன் இணைந்து பல இரவுகள் அந்த தாய்மனைக்குச் சென்றுள்ளேன். முதன் முதலில் சென்ற போது, அங்கு இரவி உடனான அறிமுகம் ஏற்பட்டது.

அங்கே, அவர்தான் அந்த வீட்டின் கடைக்குட்டி சிங்கம். அவர் ரவிச்சந்திரநேசன் என்ற பெயரிலேதான் எனக்கு முதன் முதலில் அறிமுகமானார். அவர் வேறு யாருமில்லை, எனது பாடசாலை நண்பனும் தற்போதைய தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் பொறுப்பாளருமான ஐங்கரநேசனின் தம்பி தான்.

அப்போது அதிகம் ஊரடங்கு நேரம் என்பதால், சாப்பாட்டுக் கடைகள் எல்லாம் பூட்டப்பட்டு இருக்கும். விடுதலைப் போராட்டத்திற்கான இயக்க வேலைகளை முடித்துக் கொண்டு நமக்கான உணவையும் பாதுகாப்பையும் தேடி நண்பராக, உறவாக அங்கு சென்றபோது, இந்த வீடும் எம்மை அணைத்துக்கொண்டது. அப்போதெல்லாம் அவர் சிறுவராக இருந்தபடியால் அவருடன் நான் அதிகமாக உரை யாடலில் ஈடுபடவில்லை. காலவோட்டம் இலங்கையில் இருந்த பாதுகாப்பு நிலைமைகள், மேற்படிப்பு நிமித்தம் அவரைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு சென்றது.

தமிழ்நாட்டிற்குக் கல்வி கற்கச் சென்ற அவர், தோழர் பத்மநாபா தலைமையிலான ஈபி.ஆர்.எல்.எவ் என்ற விடுதலை அமைப்பின் மாணவர் அமைப்பான GUES என்று பலராலும் அறியப்பட்ட 'ஈழ மாணவர் பொது மன்றத்தில்' இணைந்து வேலை செய்தார். அதனால் அவர் எனக்கு அங்கு 'GUES ரவி' என்றே பின்னர் அறிமுகமானார். இலங்கையில் இருந்து அகதிகளாகச் சென்று தமிழ்நாட்டில் கல்வி கற்கும் மாணவர்கள், பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கு ஆதரவாகச்

செயற்படும் தாய்நாட்டு மாணவர்கள் என அவரின் அரசியல் செயற்பாடுகள் விரிவடைந்தபோது அவர் எனக்கு 'தோழர் ரவி'யாக உணரப்பட்டார்.

ஈழவிடுதலைப் போராட்டத்தில் நிகழ்தேறிய முக்கிய அரசியல் நிகழ்வான இலங்கை இந்திய ஒப்பந்தமும் அதனைத் தொடர்ந்து அமைதிப்படை ஈழத்திற்குச் சென்றதும் ஈபி.ஆர்.எல்.எவ்-இன் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தாயகம் திரும்ப வேண்டியநிலையை ஏற்படுத்தியது. இந்த நிலைமையில் தமிழகத்திற்கான ஈபி.ஆர்.எல்.எவ்-இன் பொறுப்பை தோழர் இரவி வகித்துக்கொண்டு சிறப்பான செயற்பாடுகளைச் செய்தார். வடக்கு கிழக்கு இணைந்த வடக்கு கிழக்கு மகாணசபை காலத்தில் அவர் கனடாவிற்கு இடம்பெயர்ந்தார். அக்காலத்தில் ஈழத்தில் தொடர்ந்து வேலைகளை முன்னெடுக்குமாறு கட்சி என்னைப் பணித்தபோது, அதனை வேறு ஒருவரிடம் வழங்குமாறு கேட்டுக்கொண்டு, ஈழத்தில் என் பணிகளைத் தொடர்ந்தேன்.

மிகக் குறுகிய காலம் தனது ஆயுளைக் கொண்டிருந்த, வடக்கு கிழக்கு மகாணசபை செயல் இழந்தநிலையில் இந்திய அமைதிப்படை இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றமையால் என்னைப் போன்றவர்கள் பாதுகாப்புத் தேடி கனடாவிற்கு இடம்பெயர்ந்தனர். அவ்வாறு கனடாவுக்கு இடம்பெயர்ந்த சந்தர்ப்பத்தில் இரவியைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

தற்போது கனடாச் சூழலில் இரவி 'வைகறை இரவி'யாக அறியப்பட்டிருந்தாலும் எனக்கு இரவியை ஈழ முழக்கம் இரவி, ஈழச்செய்தி இரவி, செந்தழல் இரவி, ஸ்பொக் மன் (SPOKE-MAN) இரவி என்ற வகையில்தான் அதிகம் தெரிந்திருந்தது. ஈழ முழக்கம், ஈழச்செய்தி, செந்தழல் இவை எல்லாம் பத்மநாப தலைமையிலான அன்றைய ஈபி.ஆர்.எல்.எவ்-இன் பிரச்சார வெளியீட்டுப் பிரசுரங்களாகும். இவற்றை நாம், சென்னையில் திருவல்லிக்கேணியில் உள்ள தேவநேயபாவாணர் அச்சகத்தில் அச்சடித்து வெளிக் கொண்டு வந்தோம். இரவி வைகறை இரவியாக மாற்றம் பெற்ற பிற்பாடு, இந்த வெளியீடுகளையும் இதழ்களையும் தன் சிந்தனையில் இருத்தியே தன் பயணத்தை தொடர்ந்தார்.

இரவி கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பிற்பாடு, தோழர் பத்மநாபா கோடம்பாக்கத்தில் வைத்துக் கொலை செய்யப்பட்டார். அதன் பின்னர் தோழர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையில் பயணப்பட்டோம். அக்காலப்பகுதியில் ஈழ முழக்கத்துக்குள்ளும் ஈழச்செய்திக்குள்ளும் நாம் இருவரும் இணைந்திருந்தோம். இதன் தொடர்ச்சியாகக் கண்ணோட்டம் என்ற பத்திரிகைக்குள்ளும் எம்மை அடக்கிக் கொண்டோம்.

ஆனால், ஈழ நிலத்திலிருந்த ஈழ விடுதலைப் போராட்டத்தின் தலைமை என்பது பன்முகப்படுத்தப்பட்ட தலைமையா? அல்லது, தமிழீழ விடுதலைகளின் சிந்தனையான ஒற்றைத் தலைமையிலானதா?, மாற்றுத்தலைமைகளையும் மாற்றுக் கருத்துக்களையும் பன்முகப்படுத்தப்பட்ட கருத்தியலையும் மறுத்துச் செயற்படும் சூழல் ஏற்பட்ட பொழுது இரவி அந்த ஒற்றைத் தலைமைப் பக்கம் தன்னைச் சாய்த்துக்கொண்டார்; தோழர் பிரேமச்சந்திரனுடன் இணைந்து பன்முகத்தலைமையை மறுதலித்த செயற்பாட்டிற்குள் தன்னை உட்படுத்திக் கொண்டார் என்றே எம்மால் உணரப்பட்டது.

இதில் இருந்து தான் இரவிக்கும் எனக்கும் இடையான அரசியல் கருத்தியல் முரண்பாடுகள் அதிகம் ஏற்பட ஆரம்பித்தன. ஆனாலும், இரவியுடன் எப்பொழுதும் ஓர் உரையாடலை ஏற்படுத்தக்கூடிய மாதிரியான உறவினை நான் எனக்குள் வளர்த்துக் கொண்டேன். இதன் தொடர்ச்சியே இன்று நீங்கள் பார்க்கும் 'வைகறை இரவி'. உண்மையில் வைகறையின் முகம் தான் ரவி; அதன் நெறியாள்கை, வழிகாட்டல், ஆரம்பம் எல்லாமே உங்கள் பலருக்கும் தெரியாத தோழர் வில்சன்தான். ஆனாலும் உழைப்பின் வெளி முகமாகவும் வெகுஜன முகமாகவும் இரவி நிறையவே இருந்தார். அவருடன் யோகா வளவனும் இணைந்து கொண்டார்.

இதற்கு அப்பாலும் இரவிக்கு ஒரு முகம் உண்டு. 'தாயகம்' ஜோர்ஜ் என்று உங்களால் அதிகம் அறியப்படும் ஜோஜ் குருசேவ் அவர்களால், 50 முதலீட்டாளர்களை உள்வாங்கி புலம்பெயர் தேசத்தில் பன்முகப்படுத்தப்பட்ட கருத்தியலை முன்வைக்க வேண்டும் என்பதற்காக ஓர் ஊடகம் உருவாக்கப்பட்டது. இதுவரையில் இருக்கும் ஒற்றை அடிப்படைவாத தமிழ்த் தேசியக் கருத்தியலுக்கு அப்பால் மக்களுக்கான தேசியம், மக்களுக்கான அரசியல் பேசப்பட வேண்டும் என்பதற்காகப் பத்திரிகை ஒன்றை நடத்துவதாக தீர்மானித்து அதில் இணைந்து வேலை செய்யக்கூடிய பலரையும் இணைத்து பூபாளம் என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இது பலரின் கூட்டுறவு. இதில் ரவியும் இணைந்து கொண்டார் அந்த பத்திரிகையும் பல பக்கங்களுடன் வாரா வாரம் கனடாவில் உள்ள அனைத்து கடைகளிலும் மிகவும் சிறப்பாக நேரம் தவறாது வெள்ளி தோறும் விநியோகம் செய்யப்படக் கூடிய மாதிரி வெளிவந்தது. அது ஒரு பெரிய தாக்கத்தை கனடாவில் ஏற்படுத்தியது. இன்று பலரும் மறந்திருக்கலாம். ஆனால், கனடா சூழலில்தான் இப்படியாக பன்முகப்படுத்தப்பட்ட கருத்தியலைத் தாங்கி, முற்போக்குக் கருத்தியலை முன்வைத்து வெளிவந்த பத்திரிகையாக பூபாளம் வெளிவந்தது. இதன் ஆயுட் காலம் ஆறு மாதத்துக்கு உட்பட்டதாக இருந்தாலும், அந்த பத்திரிகையில் இரவியும் நானும் இன்னும் பலரும் இணைந்து வேலை செய்தோம்; எனவே எனக்கு அந்தப் 'பூபாளம் இரவி'யையும் கனடாவில் தெரியும்.



நமக்கு இடையே கருத்தியல் ரீதியான முரண்பட்ட நிலைப்பாடு இருந்தாலும் இரவியுடன் தொடர்ச்சியாக உரையாடுவதையும்

சந்திப்பை ஏற்படுத்துவதையும் நான் தொடர்ந்து கொண்டே இருந்தேன். அவரின் சகாவாக இருக்கும் வளவனுடனும் நான் சந்திப்பைத் தொடரந்துகொண்டிருந்தேன். என் எழுத்துப் பணிகள் தொடர்ந்து கொண்டிருந்தன. அவரும் மட்டுப்படுத் தப்பட்ட அளவில் தனது எழுத்துகளை வைகறைக்குப் பிற்பாடு தொடர்ந்துகொண்டிருந்தார்.

ஒரு தினம் என்னை ஒரு தேநீர் கடையில் சந்தித்து நீண்ட நேரம் பேசிக்கொண்டு இருந்த பொழுது கேட்டார், 'நீங்கள் நல்லாத்தான் எழுதுகிறீர்கள், சரியாக பல விடயங்களை கூட்டங்களில் பேசுகின்றீர்கள், ஆனால் உங்கள் எழுத்துகளும் பேச்சுக்களும் அந்த 45 பேரிடம் மட்டும்தான் அதிகம் செல்லுகின்றது. நீங்கள் இந்த விடயங்களை அந்த 45 பேருக்கு அப்பால் கொண்டு செல்வதற்குரிய அணுகுமுறைகளை, தளங்களை, களங்களை அமைத்துக்கொள்ள வேண்டும்' என்று. என்னிடம் அவர் விடுத்த வேண்டுகோளை உள்வாங்கி எனக்குள் ஒரு முடிவை எடுத்துக் கொண்டேன். எனது சித்தாந்தம், கொள்கை, அதனுடைய செயற்பாடுகள், எழுத்துகள், பேச்சுகள் என்பதில் நான் எந்த விட்டுக்கொடுப்பையும் செய்வதில்லை.



ஆனால், இந்த விடயங்களை மக்களிடம் கொண்டு செல்லும் தளத்தையும் களத்தையும் ஒரு பரந்துபட்ட வழிக்கு கொண்டு போவது என்ற அணுகுமுறையை, தந்திரோபாயத்தை எனக்குள் வகுத்துக்கொண்டு செயற்பட ஆரம்பித்தேன். புலம்பெயர் தேசத்து பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிகள் எமக்குத் தரமறுத்த களத்தை நான் சமூக ஊடங்களில் உருவாக்கியும் கொண்டேன். அதன் ஒருவடிவம்தான் 'சூத்திரம்' இணையத் தளம். தொடர்ச்சியாக 20 வருடங்களுக்கு மேலாக செயற்படும் தளம் இது. இதற்கான தூண்டுதலை இரவி என் மனதில் விதைத்தார் என்பது உண்மையே. அன்று வளர்ச்சி அடைந்து வந்த சமூக ஊடகங்கள் எனக்கு தளத்தையும் களத்தையும் அமைத்துக் கொடுத்தன. ரவி எனக்கு அறிவுரையாகக் கூறிய விடயத்தில் வெற்றிகளை அல்லது முன்னேற்றங்களை நான் அதன்பின்பு கண்டு கொண்டேன். இந்த வகையில் பலருடன் தொடர்புகளை ஏற்படுத்தல் சம்பந்தமான ரவியின் அணுகுமுறையும் செயற்பாடும் எனக்கு ஒரு பாடமாகத் தான் இருந்தது. அந்த வகையில் தோழர் இரவியை பாராட்டவும் நினைவு கூறவும் கடமைப்பட்டுள்ளேன்.

பலருக்கும் இரவியின் ஆரம்பகால தனிப்பட்ட வாழ்க்கை தெரியாமல் இருந்திருக்கலாம். இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் தனது கல்வியில் அதிக அக்கறையுடன் ஈடுபட முடியாத அளவு அரசியலில் ரவியின் அர்ப்பணிப்பும் போராட்ட சூழலும் இருந்தாலும் கூட, கல்வியிலும் புதிய வற்றைத் தேடி அறிவதிலுமான தேடல் அவருக்குள் என்றுமே இருந்து கொண்டிருந்தது. அதற்கான களத்தை இந்த கனடா அவருக்கு கொடுத்தது. அதனை அவர் சரியாகத்தான் பயன் படுத்திக்கொண்டார். டன்போத் தெருவும் சென்ட் கிளையர் தெருவும் (Danforth and St.Clair) சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள எஸ்ஸோ (ESSO) எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரவு முழுக்க காசாளராக வேலை செய்வார். விடிந்ததும் அங்கேயே தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு நேரடியாக பாடசாலைக்குச் செல்வார். வீட்டிற்குச் சென்று உடுப்புகளை மாற்றிக் கொண்டு போவதற்குரிய நேரம் அவருக்கு இருக்கவில்லை. ஆனாலும், அவர் எப்பொழுதும் கற்பதை விட்டுக்கொடுக்கவில்லை. தொடர்ச்சியாக 11-ஆம், 12-ஆம் வகுப்பு படித்து பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஒன்றுக்கு போவதற்குரிய தகுதிகளைப் பெற்றார். அதன் அடிப்படையில் அவர் ஒட்டவாவில் அமைந்துள்ள பல்கலைக்கழகம் ஒன்றுக்கு பொறியியல் பீடத்திற்கு தெரிவானார்.

அவன் உரையாடும் போது சொற்களை 'விழுங்கி' பேசும் வழக்கத்தை கொண்டிருப்பதை அவதானித்த நான் என் பால்ய காலத்து என் உறவுத் தம்பியை அவனிடத்திலும் கண்டேன். பொறியியல் பட்டம் பெற்ற பிற்பாடு அவர் நீண்ட காலமாக காதலில் ஈடுபட்டிருந்த கெங்காவை திருமணம் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதற்காக எமது தோழமைக் கூட்டத்தை அணுகினான். நீங்கள் தான் முன்னின்று இந்தத் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும் என்று கூறினான். நாமும் நம் தோழன், நமக்கு வயதில் கீழே இருக்கும் தம்பி என்ற அடிப்படையில், நானும் என்னுடன் பயணிக்கும் சகாக்களும் இணைந்து திருமணத்தை ஒரு மண்டபத்தில் நடத்தி வைத்தோம். தம்பியின் திருமணத்தைத் தொடர்ந்து அவனது வாழ்க்கை பல காலம் சிறப்பாக தொடர்ந்ததில் அக மகிழ்ந்த பலரில் நானும் ஒருவன். இருவருமே நல்லவர்கள். இந்த இனிய வாழ்க்கையில் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் இருவர். பிள்ளைகள் மீது அப்படி ஓர் அன்பைத் தனக்குள் வைத்திருந்தார். சந்திக்கும் எல்லா வேளையிலும் கணத்திற்கு கணம் அவர்களை பற்றி என்னிடம் சொல்லி மகிழ்வதில் இருந்து அதனை நான் உணர்ந்திருக்கின்றேன்.

பொறியியலாளராகப் பட்டம் பெற்றிருந்தாலும் அதன் மூலமாக தனது வாழ்க்கைச் செலவிற்கான பொருளாதாரத்தை கட்டமைத்துக் கொள்வதில் இரவிக்கு வெற்றி கிடைக்கவில்லை என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அதனால் அவர் தனது துறையை நிதி ஆலோசகர் என்று மாற்றி அமைத்துக் கொண்டார், அதற்கூடாக நிதி ஆதாரங்களைத் தேடுவதற்குரிய முயற்சிகளிலும் அவர் ஈடுபட்டார். இதன் அடிப்படையில் என்னை ஒரு நாள் சந்தித்தபோது அவரது ‘Life 100’ என்றான நிதி நிறுவனம் ஒன்றின் விளம்பரத்தைக் கொண்ட நாட்காட்டியை என்னிடம் தந்தார். இது நடைபெற்றது 2017-இல்; இன்றுவரை அந்த மாத நாட்காட்டியை என்னோடு வைத்திருக்கின்றேன்.



பொதுவாக நாட்காட்டிகள் வருட முடிவில் குப்பைக்குள் போகும் கடதாசிகளாக இருக்கும். ஆனால் இந்த நாட்காட்டி எமது தமிழ் பாரம்பரிய உணவு வகைகள், அதுசார்ந்து இலக்கியவாதிகள் எழுதிய எழுத்துக்கள் போன்ற மிக அருமையாக தகவல்களை அழகாக தொகுத்து ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு நூலகத்தை இணைத்தது போல் இணைத்திருந்தது. இவ்வளவு விடயங்களையும் ஒரு மாத நாட்காட்டிக்குள் இணைப்பது கடினம். ஆயினும் இதனை சாத்தியப்படுத்துவதற்கு வாசிப்பு, சிந்தனை, உழைப்பு, முன்னோக்கிய சிந்தனை என்பன அவசியம். இதனைக் காலச்சுவடு செய்திருந்தது. இது என்னிடம் இன்றும் பொக்கிஸமாக பாதுகாப்பாக இருக்கின்றது. அவசரமாக இயற்கை எய்திய இரவியின் ஞாபகங்களை இதுவும் எனக்குள் மீட்டுக் கொண்டுதான் இருக்கும்.

இதன் தொடர்ச்சியாக, அவர் இறுதியாக எந்தப் பொது வாழ்க்கை, எந்த சமூகம் என்பதை தனக்குள் உள்வாங்கிக் கொண்டு இலாப நோக்கம் அற்ற ஓர் அமைப்புக்கு ஊடாக - பல்கலைக்கழகக் குழு ஒன்றின் ஊடாக உலகத்தின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று வந்தார். அதிலும் சிறப்பாக சுற்றுச்சூழல் ஆய்வுகளையும் அவை குறித்த சில வேலைகளையும் செய்து கொண்டிருக்கும் பொழுதுதான், இம்முறை அவர் இலங்கைக்குச் சென்றிருந்தார். அந்தப் பொதுப்பணியை மேற்கொண்டிருக்கும் பொழுது தான், அவர் யாரும் எதிர்பாராத சூழலில் இயற்கை எய்தினார் என்பது இங்கு ஒரு வேதனையான விடயம்.

அவர் இறுதிவரை யாரைத் தனது நெருக்கமான தோழனாக, தலைவராக நம்பி பொதுவாழ்வில் ஈடுபட்டாரோ அவரின் வீட்டிலேயே அதிகாலைவேளை, கட்டைப்பிராயில் உயிர் துறந்தார். இதுவும் ஒருவகைக் கொடுப்பனவுதானோ.

ஜீவகாருண்யம் அதிகம் உள்ளவராக அவர் காணப்பட்டார். அவரின் வாழ்க்கையில் வாழ்க்கைத் துணையைப் பிரிந்து, தள்ளி இருக்கும் தனிமை அவரைக் கடுமையாகப் பாதித்தது. இத்தனிமை அன்பாக வளர்க்கும் பிராணிகளை நோக்கி அவரை நகர்த்தி இருந்தது. அதனை அவரின் பிற்கால வாழ்க்கையில் நாம் அதிகம் காணமுடியும். இது பற்றிய பல நினைவுகளை மோனிகா - குருசேவ் இணையர்களிடம் நாம் அறிந்து கொள்ளமுடியும்.

பறவைகள், மிருகங்கள் என எல்லா உயிரினங்களிலும் அவர் ஆர்வம் காட்டி இருந்தார். அதனை அவர் இடையிடையே தனக்குள் உள்வாங்கிக் கொண்டு புகைப்படக் கருவிக்குள் அடக்கிக் கொண்டார். அவற்றை முகநூலில் சிறுகுறிப்புகளுடன் பதிவிட்டபோது தொடரந்து வாசித்து வந்தேன். குளிரான கனடாவிற்குள் இதனை வல்லூறுகளா? பருந்துகளா? குருவிகளா? பறவைகளா?... இரவியின் தகவல்கள் பிரமிப்பை எனக்குள் ஏற்படுத்தியது. இந்தப் புகைப்படங்களில் ஓர் அழகியலை, ஒரு கவிதையை, ஒரு காட்சிப்படுத்தலை நான் கண்டு கொண்டே இருந்தேன். இவற்றை அவரின் ஞாபகமாகத் தொகுக்கலாம் என்று வைகறை நண்பர்களிடம் அன்பாக வேண்டுகின்றேன். அந்தச் சிறுகுறிப்புகளில் அவர் மிக ஆழமான ஒரு தேடலை கொண்டு இருந்தார் என்பது அவரின் செயற்பாடுகளில் இருந்து உணர முடிந்தது. இந்த புகைப்படக் கருவிக்குள் இயற்கையை, மனிதர்களை, ஜீவராசிகளை, அடக்குதல் என்பதற்கு அப்பால், றொறன் ரோவில் நடைபெற்ற பொது நிகழ்வு ஒன்றில் என்னையும் ஒரு தடவை அடக்கிக் கொண்டார். என்னைக் கருப்பு வெள்ளையாக புகைப்படம் எடுத்து எனக்கு அனுப்பி வைத்தார். அதுக்கு எல்லா வகையிலும் நான் தகுதி உடையவன்தான். ஏனெனில், இரவி எனது கறுப்பையும் வெள்ளையையும் நன்றாக அறிந்தவர். அந்த வகையில் புகைப்படத்தில் என்னை கருப்பு வெள்ளையாகப் பதிந்து எனக்கு அதை அனுப்பி வைத்ததில் இருக்கும் அன்பையும் ஆழத்தையும் உணர்ந்தும் கொண்டேன். ஆனாலும், இது தற்செயல் கறுப்பு வெள்ளையாகக்கூட இருக்கலாம்.

இதற்கு அப்பால் பலதரப்பட்ட மக்களுடனும் பலதரப்பட்ட நண்பர்களுடனும் ஒன்று கூடி தமது கருத்தை பரிமாறிக் கொள்வதும் உரையாடுவதும் சாத்தியப்படும் பொழுது கூடாரம் அடித்து குதூகலிப்பதும் இரவியின் இயல்பு. வைகறை பத்திரிகையில் எழுதுவதற்கு வாய்ப்பளித்த, வாய்ப்

பளிப்பதற்கு அழைப்பை விடுத்த பலரும் இவரை வைகறை இரவியாகவே நோக்குவர். கனடாவின் பொதுவெளியில் இவர் வைகறை இரவியாக அறிமுகப்படுத்தப்படுவதால் நானும் அவரை உங்கள் முன் வைகறை இரவியாக அழைக் கின்றேன். ஆனாலும் இந்த வைகறைக்குள் ஒரு ஈழ முழக் கமும் ஒரு கண்ணோட்டமும் ஒரு பூபாளமும் ஒரு சூத்திரமும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

இரவியின் மூத்த அண்ணன் ஐங்கரநேசன் தமிழ் பேசும் பொதுப்பரப்பில் அதிகம் அறியப்பட்டவர்; எனது பாடசாலை நண்பர். கடந்த வருடம் ஊருக்குச் சென்ற பொழுதும் அவரிடம் சென்று எனது அன்பைப் பகிர்ந்து உரையாடிக் கொண்டிருந்தேன். இரவியின் திடீர் மரணம். அன்று நானும் தாயகத்தில் தான் இருந்தேன். அதற்கு முதல் நாள் இரவு ஒன்பது மணியளவில் ஏழாலையில் உள்ள வடகோவை வரத ராஜன் வீட்டில் அவரைச் சந்திக்கும் முகமாக சென்றும் இருந்தேன். இந்த உரையாடலில் பல்வேறு விடயங்களுக்கு மத்தியில் இரவி யாழ்ப்பாணத்தில் நிற்பதாகவும் அவர் அன்றைய தினம் யாழ் நகரை சுரேஸ் பிரேமசந்திரனுடன் இணைந்து பார்வையிட்டதாகவும் அறிய முடிந்தது. அப்பொழுது நமது பேச்சில் பெரும்பாலும் இரவியின் செயற் பாடுகள் பற்றிய விடயங்கள் தொடர்ந்தன. சிறப்பாக சூழலியல் சம்பந்தமாக அவர் சர்வதேச அளவில் பெற்ற அனுபவங்களை இலங்கையிலும் அறிமுகப்படுத்தலாம் என்ற வகையில் எமது உரையாடல்கள் தொடர்ந்தன.

மரங்களுக்கான சோலை வரியை அரசுகள் அறவிடுகின்றன. அதுதான் இலங்கையிலும் நடைமுறையில் உள்ளது. ஆனால் அண்மையில் இரவி சென்றிருந்த கொஸ்ர ரீக்கா என்ற நாட்டில் மரங்களை நட்டால் அரசு அதை ஊக்க விக்கும் முகமாக மக்களுக்கு பணக் கொடுப்பனவைச் செய் கின்றது என்ற செய்தி எமக்குள் இணைந்து கொண்டது. இதனைப் போன்ற ஒரு விடயத்தை நாம் ஏன் இங்கு செய்யக் கூடாது என்பதை சுற்றுச் சூழலியலில் ஆர்வமும் அறிவும் உள்ள வடகோவையார் என்னிடம் கூறியிருந்தார். எனக்கும் இந்த சுற்றுச்சூழல், பசுமை இயக்கம் போன்ற விடயங்களில் ஆர்வம் இருந்தபடியால் நானும் அதை ஏற்றுக் கொண்டேன். அதற்கு நானும் ஆதரவும் தெரிவித்துக் கொண்டேன். இந்தச் சந்திப்பு இரவு 11 மணி வரை நீடித்தது. பின்னர் நான் தங்கும் இடத்துக்குச் சென்று, எழுத்து வேலைகளில் ஈடுபட்டு நித்தி ரைக்குச் சென்றேன். காலையில் எழுந்து என்னை தயார்ப்ப டுத்திக்கொண்டு மீண்டும் பொதுமக்கள் சந்திப்புகளை மேற் கொள்வதற்காகப் புறப்பட்ட பொழுது என்னுடன் வந்த எனது நண்பர் - எனக்கு உதவியாக செயற்பட்டவர் சொன்னார் ‘உங்கள் கனடாவில் உள்ள ஒருவர் இங்கு வந்திருக்கின்றார். அவர் பெயர் இரவியாம். செத்துப் போனாராம்...’ என்று.

எனக்குத் தெரியும் இரவி அப்போது யாழ்ப்பாணத்தில் உள்ளார் என்று; ஆனால் வைகறை இரவியாக அது இருக்கும் என்பதை உடனடியாக எனக்குள் போட்டுக் கொள் ளவில்லை. காரணம் அவரின் உடல் ஆரோக்கியம் பற்றிய நம்பிக்கைகள் எனக்குள் இருந்தது, அத்துடன் இரவி இறப்ப தற்கான வயதும் அல்ல. ஆனாலும் மேலும் தகவலைத் தேடிய போது அது எனது தோழன் இரவி என்பது உறுதி யாகப் பேரிடிச் செய்தியாக, பேரதிர்ச்சியாக இருந்தது.

அதன் தொடர்ச்சியாக அவர் வீட்டில் மரியாதை நிமிர்த்தம் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்குச் சென்று அஞ்சலி செலுத்தி மூன்று மணித்தியாலம் அவர் வீட்டில் உட்கார்ந்து விட்டு வெளியேறினேன். என்னை வீட்டின் படலையில் இருந்து அழைத்துச் சென்று இரவிக்கு நான் மரியாதை செலுத்தும்போது என் அருகில் இருந்தவர் எனது பாடசாலை சகபாடி நண்பன் ஐங்கரநேசன்.

அப்போது நான் அணிந்திருந்த தொப்பி அவரைக்கு என்னை யார் என்று இனம் காட்டவில்லை. என் தோற்றம் காணுவதற்கு கடினமாக இருந்திருக்கலாம்; சற்று நேரம் பலருடன் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு என்னிடம் வந்த ஐங்கர நேசன் எனக்கு அருகில் வந்து ‘என்னவோ உன்னைப் பார்த்தால் எனக்கு ‘ஈசுக் குட்டி’ மாதிரி தான் தெரிகிறது’ என்றார்.

ஆம் நான் ‘ஈசு’க் குட்டி என்ற ஈஸ்வரமூர்த்தியாக, யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி மாணவனாகத்தான் அவருக்கு அறி முகமானேன். தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஐங்கரநே சனுடன் எங்கள் உறவு இருந்தது. அந்த வீட்டுடனும் அந்த வீட்டில் உள்ளவர்களுடனும் இதற்கு அப்பால் பொது வாழ்விலும் எம் உறவு தொடர்ந்தது. பிரத்தியேகமாக அன்றைய பத்மநாபா தலைமையிலான ஈபி.ஆர்.எல்.எவ் உடனான உறவு இன்று வரையும் தொடர்கையில், இடதுசாரி கருத்தியலுடனும், சமூக நீதியுடனும் எனக்கும் இரவிக்கும் இடையிலான உறவு, முரண்பாடுகளுடனும் உடன்பாடுகளு டனும் தொடர்ந்தது. உரையாடல்களை, போராட்டங்களை ஏற் படுத்தக்கூடிய ஒரு தோழனாக, ஒரு பொது மனிதனாக இன்று வரை இரவி இருந்தமையால் தொடர்வதால், அதனை நான் பதிவு செய்ய வேண்டிய தேவைக்குள் இருக்கின்றேன்.

நீ விட்டு செல்லும் பணிகளும் பாதைகளும் ஏதோ ஒரு வகையில் இன்னும் பலநாட்கள் பலராலும் முன்னெடுக்கப் படும் என்பது உன் சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் கிடைத்த வெற்றியாகக் கொள்ளலாம். இரவி முன்னெடுத்த பலவிடயங்களை தொடர்வதற்குரிய உடன்பாடுகள் எனக் குள்ளும் இருக்கின்றன.

அவர் பொது வாழ்வில் அதிகம் பேசப்படக்கூடிய, எழுதப்ப டக்கூடிய, பதியப்படக்கூடிய, கவனிக்கப்படக்கூடிய ஒரு வாழ்க்கை முறையை கொண்டிருந்தார். மரணத்தின் பின்பும் அவரது வாழ்வு பேசப்படும் ஒன்றாக அமைகின்றது. ஆதலால் இரவியிற்கும் மரணத்தின் பின்பும் வாழ்வு உண்டு.



james@thaiveedu.com



# இரவிநேசன் என்னும் இயற்கை நேசனுடனான எனது ஈர அனுபவங்கள்

– வடகோவை வரதராஜன்

இரவியுடன் நான் பழகத்தொடங்கி ஏறக்குறைய ஆறு வருடங்கள்தான் இருக்கும். எனது தம்பி யோகா வளவன் தியாகராஜாவின் நெருங்கிய நண்பரான இரவி, அவருக்கூடாகவே எனக்கு அறிமுகமானார் .

எல்லோரும் 'வைகறை ரவி', 'கெஸ் ரவி' என்றெல்லாம் அவரை அழைக்க, எனக்கு அவை பற்றியெல்லாம் தெரியாது. எனக்குத் தெரிந்தது 'இயற்கை நேசன் இரவி' பற்றி மாத்திரம்தான்.

ஒவ்வொரு முறை இலங்கை வரும்போதும் இரவி தவறாமல் என்னிடமும் வருவார். எங்களுக்குப் பேசப் பல விடயங்கள் இருந்தன. செய்வதற்குப் பல கனவுகள் இருந்தன. பேசினோம். மணிக்கணக்கில் பேசினோம்.

என்னால் இப்போ பேசமட்டுமே முடிகிறது. களத்தில் இறங்கி காரியமாற்ற எனது தற்போதைய உடல் நிலை இடம் கொடுப்பதில்லை .

இரவி கனவுகளைச் சுமந்தார். அதைக் காரியமாக்கவும் கனவு கண்டார். அதற்கான சில ஏற்பாடுகளையும் செய்தார்.

முதல் முறையாக இரவி என்னிடம் வந்தபோது பொலுத்தீன்/பிளாஸ்டிக் கழிவுகள் எமது சூழலை மாசாக்குவது பற்றியும் வரையற்ற மண் அகழ்வினால் ஏற்படும் சூழல் சிதைவு பற்றியும் பேசினோம்.

பிரதேசசபைகள் குப்பைகளைச் சேகரித்துக் கொண்டுபோய் ஒரு இடத்தில் கொட்டி, அதற்குத் தீ வைப்பதைப் பற்றி கவலையுடன் இரவி பேசினார்.

புலம் பெயர் தமிழர்கள், பொலுத்தீன் மறுசுழற்சித் தொழிற்சாலை ஒன்றை சேவையடிப்படையில் அமைக்க முன்வரவேண்டும் என்ற கருத்தை நான் சொன்னேன்.

பல்கிப் பெருகும் பொலித்தீன் குப்பைகளைக் கெட்டியான, பருமனான செவ்வக வடிவத் துண்டுகளாக மாற்றி அதைக் கொண்டு மதில் அமைப்பது பற்றியும், பொலுத்தீனைக் கூழாக்கி அதில் சில பொருட்களை சேர்த்து வீதிகள் போடுவது பற்றிய எனது கருத்தையும் சொன்னேன்.இதனால் எமது நாட்டில் பெரும் சூழல் பிரச்சினையான மண் அகழ்வின் அளவைக் குறைக்கலாம் என்றும் சொன்னேன். அதைக் கெட்டியாக பிடித்துக் கொண்டார் இரவி. இது பற்றி, தான் புலம்பெயர் அமைப்புகளுடன் கதைப்பதாகக் கூறினார்.

இயற்கை நேசத்தின் ஒரு பகுதியாகக் கானுயிர்களை ஒளிப்படம் எடுப்பதை தனது பொழுது போக்காகவும் கொண்டிருந்தார் இரவி. சிறந்த ஒளிப்படக் கலைஞரான அவர் எடுத்த கானுயிர்களின் படங்களைப் பார்க்கும் போது, ஆந்தை கூட இவ்வளவு அழகாய் இருக்குமா என நான் வியந்ததுண்டு.

கனடிய ஆற்றின் கரைகளில் வாழும் பீவர் (Beaver) என்ற கொறிஉயிரி ஒன்றை ஒளிப்படம் எடுத்து அனுப்பியபோது, பீவர் தனக்கான கூட்டை அமைப்பதற்காக, பெரிய பெரிய மரங்களை தன் பற்களால் கொறித்து வீழ்த்தி, ஆற்றுக்கு குறுக்காகப் போட்டு அணை கட்டுவதையும், அதனால் ஆறு, சிலசமயம் தனது வழமையான வழித்தடத்தை மாற்றி வேறு வழித்தடத்தில் செல்வதைப்பற்றியும், நான் அறிந்ததைச் சொன்னேன்.

**“ பசுமைச் சூழலை உருவாக்குவது பற்றியும், இயற்கை முறையில் வீட்டுத் தோட்டத்தை உருவாக்குவதை ஊக்கப்படுத்தி, எம் மக்களின் சுய சார்புப் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதில் இரவியின் கனவுகள் அளப்பரியன ”**

வியப்புடன் கேட்ட இரவி, மனிதர்கள் இவ்வளவு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மரங்களை வெட்டும் போதும், சில சமயம் நாம் எதிர்பாராத திசையில் மரம் விழுந்து விடுவது உண்டு. ஆனால் பெரிய முயல் அளவில் இருக்கும் ஒரு விலங்கு, எந்தத் தொழில் நுட்ப சாதனங்களுமின்றி தன் பற்களாளேயே மரத்தை அறுத்து, தான் விரும்பும் திசையில் வீழ்த்தும் இயற்கையின் விந்தையை நெடு நேரம் வியந்து கொண்டிருந்தார்.

ஒரு மாலைப் பொழுதில் எமது வீட்டுக்கு வந்து வளவைச் சுற்றிப் பார்த்தபோது, எமது கோழிகள் தமது இராத்தங்கலுக்காக, எலுமிச்சை மரத்தில் ஏறி அமர்திருப்பதைப் பார்த்த அவர், எலும்பிச்சை மரத்தை தேர்ந்தெடுத்த காரணத்தைக் கேட்டார்.

எமது பிரதேசத்தில் கோழிகளைப் பிடிக்கும் மரநாய்களின் தொந்தரவு அதிகம் என்றும், மரநாய்கள் எலும்பிச்சை மரத்தின் முட்களுக்கு அஞ்சி அதில் ஏறாது என்றும், கோழிகள் இரவில் இடும் எச்சம் எலும்பிச்சை மரத்திற்கு பசளையாகும் இயற்கையின் ஒன்றிய வாழிச் செயல் முறை பற்றியும் சொன்னேன்.

இயற்கையின் மாபெரும் விந்தையை விதந்து விதந்து பேசிய இரவி, அக்கோழிகளையும் எமது வீட்டில் உள்ள வான் கோழிகளையும் படமெடுத்துக் காட்டியபோது வியந்து போனேன். காடு ஒன்றில், கோழிகள் மரத்தில் அமர்ந்திருப்பது போன்ற தோற்றத்தில் அப்படம் அமைந்திருந்தது.

வான்கோழி வளர்ப்பதைப்பற்றிக் கேட்டார் அவர். வான்கோழிகள், அந்நியர் வரவைக் கண்டு உரத்த குரலில் எச்சரிக்கும் என்றும், சமயத்தில் தாக்கக் கூடச் செய்யுமென்றும், இரவில் திருடர் நடமாட்டம் தெரிந்தால் உரத்த குரலில் சத்தமிட்டு எம்மைத் துயில் எழுப்பும் என்றும், வான்கோழிக்கு அஞ்சி வளவுக்குள் பாம்புகள் வரமாட்டாது என்பதையும் சொன்னேன்.

இயற்கையுடன் இசைந்து வாழ்தல் என்பது இத்தகைய வாழ்க்கைமுறைதான் என்று பெருமிதப்பட்டார் இரவி.

பசுமைச் சூழலை உருவாக்குவது பற்றியும், இயற்கை முறையில் வீட்டுத்தோட்டத்தை உருவாக்குவதை ஊக்கப்படுத்தி, எம் மக்களின் சுயசார்புப் பொருளாதாரத்தை வளர்த்தெடுப்பதில் இரவியின் கனவுகள் அளப்பரியன.

கடைசியாகத் தாயகம் வந்தபோது இதற்காகப் பலரைச் சந்தித்துப் பேசினார். கிராமங்கள் தோறும் சென்று, குறுநில விவசாயிகளைக் கண்டு அவர்களின் அனுபவங்களைச் சேகரித்து கொண்டிருந்தார். அதன் ஒரு கட்டமாக, எமது கிராமத்திற்கும் வந்து, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உட்பட ஏறத்தாழ 15 வீட்டுத்தோட்ட விவசாயிகளைச் சந்தித்தோம். அவர்களுடன் பேசிய போது, கடும் வரட்சியும் காலம் தப்பிப் பெய்யும் மழையும் தமது விவசாயச் செய்கைக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாகக் கூறினார்கள்.

இத்தகைய காலநிலை மாற்றத்திற்கான காரணங்கள் எவையாக இருக்கும் என அவர்களிடம் கேள்வி எழுப்பினோம். ஏதேதோ காரணங்கள் சொன்னார்கள். ஆனால் ஒருவரும் மரங்கள் அழிக்கப்படுவதை ஒரு காரணமாக சொல்லாதது எமக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

நாம் எல்லாம் காடழிப்பின் தீமை பற்றியும், பசுமை உருவாக்கத்தின் அவசியம் பற்றியும், பத்திரிகைகளில் எழுதுகிறோம், முகநூலில் எழுதுகிறோம், zoom meeting போட்டு கலந்துரையாடுகிறோம். இவை எமக்குள் நாமே பரிமாறிக் கொள்ளும் தகவல்களாகவே இருக்கிறதேயன்றி சாதாரண பொதுமகளிடம் இவை போகவில்லை என்ற கருத்தை நான் சொன்னேன்.

இதை ஏற்றுக்கொண்ட இரவி, கிராமங்கள் தோறும், கிரா

மத்தில் உள்ள குறிச்சிகள் தோறும் நாம் கலந்துரையாடல் செய்யவேண்டும் அதற்கான கட்டமைப்பையும் செயல் முறையையும் அடுத்தமுறை வரும்போது தான் செய்வேன் என்று உறுதி கூறினார்.

இரவி, சென்ற வருடத்திற்கு முதல் வருடம் இலங்கை வந்து என்னுடன் பேசும்போது, தான் சென்ற மத்திய அமெரிக்கா நாடான Costa Rica-வில், அங்குள்ள பிரதேசசபை போன்ற அமைப்பு, ஒவ்வோர் வீட்டில் உள்ள மரங்களையும் வருடம் தோறும் கணக்கெடுத்து, அந்த மரங்களின் எண்ணிக்கைக் கேற்ப வீட்டு உரிமையாளர்களுக்கு பணம் கொடுக்கிறது என்ற செய்தியைச் சொல்லியிருந்தார். இதனால் அந்நாடு ஏலவே அழிந்த வனவளத்தை அறுபது வீதமாகப் புதுபித் துள்ளது என்ற புதிய தகவலையும் வழங்கினார். அதை ஞாப கப்படுதிய நான், பரீட்சாத்தமாக சிறிய அளவில் அதை இங்கு நடைமுறைப் படுத்திப் பார்க்கலாம் என்று கூறினேன்.

அதாவது பயனாளிகள் தங்கள் கிராமத்தில் உள்ள பொருத் தமான பொது இடங்கள் வீதியோரங்கள் போன்றவற்றில், பன் மைத்துவச் சூழலுக்கு உதவி செய்யும் நமது சுதேசி மரங் களான வேம்பு, இலுப்பை, நாவல், இலந்தை, பெரு நெல்லி, ஆல், அரசு, புளி... ஆகிய மரங்களில் ஏதோ ஒன்றை நட்டு, அதைப் பராபரித்து வரவேண்டும். முதலாம் வருட முடிவில் மரம் உயிரோடு இருந்தால், நட்டவருக்கு ஒரு தொகை ஊக் குவிப்பு பணம் வழங்கப்படும். இரண்டாம் வருடமும் மரம் உயிரோடிருந்தால் முதல் வருடம் வழங்கியதன் இரட்டிப்பான பணமும், மூன்றாவது வருடம் மும்மடங்கான பணமும் வழங் கப்படும். மூன்றாவது வருடத்தின் பின் பராபரிப்பு ஏதுமின்றி மரம் தானாக வளர்ந்து கொள்ளும்.

பயனாளி மீண்டும் புதிதாக ஒரு மரத்தை நட்டுப் பராபரித்து ஊக்குவிப்புத் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று உரையாடலுக்கு வந்திருந்த அனைவரும் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அடுத்த கலந்துரையாடலில் எவ்வளவு பணம் ஒதுக்கப் பட வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்காக திகதி குறிக்கப் பட்டது.

இக்கலந்துரையாடல் நடந்த நாளுக்கு மறுநாள் கோடை இடியாக அந்த செய்தி வந்து நெஞ்சைப்பிழந்தது.

ஒரே அலைவரிசையில் பயணிக்கின்ற நட்புக்களின் இழப்புப் பற்றி எழுதுவதென்பது மிகக் கொடுமையானது. நெஞ்சில் கசிகின்ற இன்ப, துன்ப உணர்வுகளை வார்த்தையால் வடிப்ப தென்பது இலகுவான காரியமல்ல.

பாலைவனத்திலும் பசும்புற் தரையிலும் கணம்தோறும் மாறிமாறி நடக்கின்ற இலாகவத்தை எழுத்தில் கொண்டுவ ருவது கடினமே.

இறுதியாக, இரவியின் மறைவின் பின்னர் நான் எழுதிய ஓர் அஞ்சலிக் குறிப்பை தந்து நிறைவு செய்கிறேன்.

'இயற்கையும் பசுமையையும் நேசிப்பவர்கள் எப்போதும் மர ணிப்பதில்லை. அவர்கள் இயற்கையுடன் சங்கமாகி விடுகி றார்கள். அவர்களின் மூச்சுக் காற்று இந்த பிரபஞ்சம் முழுவதும் சுற்றித் திரிந்து இயற்கையைப் போஷிக்கும்'.



vadakovay.varatharajan@thaiveedu.com



